உ

# அருள்மிகு அகோபில வரதராஜப் பெருமாள்

# திருக்கோயில், பாலசமுத்திரம்

பழநி வட்டம், திண்டுக்கல் மாவட்டம்,

(பழநி. அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் உபகோயில்)

# திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா அழைப்பிதழ்



**திருமால்**

மாயக்கூத்தா! வாமனா! வினையேன் கண்ணா ! கண்கை கால்
தூயச்செய்ய மலர்களச் சோதி செவ்வாய் முகிழாத
சாயல் சாமத் திருமேனி தண்பாசடையா தாமரை நீள்
வாசத் தடம்போல் வருவானே ஒருநாள் காண வாராயே.

திருவள்ளுவராண்டு 2048 ஹேவிளம்பி வருடம் கார்த்திகை மாதம் 14ம் நாள்
திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா

நாள் : 30-11-2017 வியாழக்கிழமை
நேரம் : காலை 10.00 மணிக்குமேல் 11.00 மணிக்குள்

உ

குலம்தரும் செல்வம் தந்திடும் அடியார் படுதுயர் ஆயின எல்லாம்
நிலந்தரும் செய்யும் நீள்விசும்பருளும் அருளொடு பெருநில மளிக்கும்
வலந்தரும் மற்றும் தந்திடும் பெற்றதாயினும் ஆயின செய்யும்
நலந்தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன் நாராயணா என்னும் நாமம்

- திருமங்கை ஆழ்வார்

tnhrce.org

மெய்யன்புடையீர்,

குமரன் குடிக்கொண்டிருக்கும் பழநியம்பதியின் தென்மேற்கு திசையில் ஆதிமூலமாயும், ஆதியந்தம் அற்றவனாயும், மூவரில் முதல்வனாயும் இருக்கின்ற எம்பெருமான் இத்திருத்தலத்தில் உள்ள பக்த கோடிகளுக்கு எல்லா செல்வங்களையும் அருள்புரிய வேண்டுமென்று திருவுள்ளம் பற்றி, திருஅவதாரம் செய்து அருளினால் இவற்றுள் நீர்வளம், நிலவளம் பொருந்தியதும் கற்றோர் அமைந்த நற்பதியாம் பாலசமுத்திரம் எனும் பழமையான கிராமத்தில் அகோபில வரதராஜ பெருமாள் என்ற திருநாமத்துடன் எழுந்தருளி அருள்பாலிக்கும் எம்பெருமான் திருக்கோயில் பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் உபகோயிலாகும். இத்திருக்கோயிலில் எம்பெருமான் கிழக்கு நோக்கி ஸ்ரீதேவி மற்றும் பூதேவித் தாயார்களுடன் எழுந்தருளி அருள்பாலிக்கின்றார்.

இல்லார் யாவர்க்கும் நன்மை ஈயும் திருத்தலத்தின் சந்நிதி அமைப்பு முறையில் இத்திருத்தலத்தில் முதலில் பெருந்தேவித்தாயார் சன்னதியும், நடுவில் ஸ்ரீதேவி, பூதேவி சமேத அருள்மிகு அகோபில வரதராஜப்பெருமாள் சன்னதியும், அதனை அடுத்து ஆண்டாள் சன்னதியும், கன்னி மூலையில் வில்வமரத்திற்கும் அரச மரத்திற்கும் கீழே அருள்மிகு கற்பக விநாயகர் சன்னதியும், வாயு மூலையில் தும்பிக்கை ஆழ்வார் சன்னதியும், மேற்கு பிரகாரத்தில் கிழக்கு நோக்கி அருள்மிகு கிருஷ்ணர் சன்னதியும், நூதன மூல பிம்ப சக்கரத்தாழ்வார் சன்னதியும், வடக்கு பிரகாரத்தில் பரமபதவாசலும், அதன்அருகில் தெற்கு நோக்கி அருள்மிகு விஷ்வக்சேனர் சன்னதியும், கிழக்கு பிரகாரத்தில் மேற்கு நோக்கி அருள்மிகு ஆஞ்சநேயர் சன்னதியும், தெற்கு பிரகாரத்தில் வடக்கு நோக்கி திருமங்கையாழ்வார் சன்னதியும் அமைந்துள்ளதை கண்டு களிகூறலாம். மேலும், இத்திருத்தலத்தின் சிறப்பம்சமாக மகா மண்டபத்தின் மேற்கூரையில் பன்னிரெண்டு இராசிகளின் சிற்பங்கள் அழகுற வடிவமைக்கப்பட்டும், அருள்மிகு பெருந்தேவி தாயார் சன்னதியில் தெற்கு நோக்கி தசாவதார மூர்த்திகளும் அமையப்பெற்றுள்ளது மிகவும் தனிச்சிறப்பு வாய்ந்ததாகும். இத்திருக்கோயில் முழுவதும் தற்பொழுது சிற்ப ஆகம முறைப்படி திருத்தமுற திருப்பணிகள் செய்யப்பட்டு புத்தாக்கம் பெற்றுள்ள இத்திருத்தலத்தின் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா

நிகழும் மங்களகரமான ஹேவிளம்பி வருடம் கார்த்திகை மாதம் 14-ம் நாள் (30.11.2017) வியாழக்கிழமை துவாதசி திதியும், ரேவதி நட்சத்திரமும், சித்தயோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 10.00 மணிக்கு மேல் 11.00 மணிக்குள் மகர லக்னத்தில் ஸ்ரீதேவி, பூதேவி சமேத அருள்மிகு அகோபில வரதராஜப்பெருமாள் திருக்கோயில் **மகா கும்பாபிஷேகம்** ஸ்ரீ பாஞ்சராத்ர ஆகம முறைப்படி நிகழ்வுற எம்பெருமான் திருவருள் கூட்டுவித்துள்ளது.

இந்த இனிய விழா மங்கலத்தில்

மாண்புமிகு வனத்துறை அமைச்சர்

திரு. **திண்டுக்கல் சி.சீனிவாசன்** அவர்கள்,

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்

**சேவூர்** திரு. **எஸ்.ராமச்சந்திரன்** அவர்கள்,

tnhrce.org

திரு. **அபூர்வ வர்மா**, இ.ஆ.ப.,
முதன்மை செயலாளர், சுற்றுலா பண்பாடு மற்றும்
அறநிலையங்கள் துறை, சென்னை.

டாக்டர். **டி.ஜி.வினய்**, இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர்,
திண்டுக்கல்.

திரு. **இரா.சக்திவேல்**, இ.கா.ப.,
மாவட்ட காவல் கண்காணிப்பாளர்,
திண்டுக்கல்.

திரு. **எம்.உதயக்குமார்**,
நாடாளுமன்ற உறுப்பினர்,
திண்டுக்கல்.

திரு. **ச.அருண்ராஜ்**, இ.ஆ.ப.,
சார் ஆட்சியர்,
பழநி.

திரு. **இ.பெ.செந்தில்குமார்**,
சட்டமன்ற உறுப்பினர்,
பழநி.

திருமதி. **கார்த்திகேயனி**,
கண்காணிப்புப் பொறியாளர்,
இந்து சமய அறநிலையத்துறை, சென்னை.

திரு. **இரா.பச்சையப்பன்**,
இணை ஆணையர்,
இந்து சமய அறநிலையத்துறை, மதுரை.

திருமதி. **ஆர்.ஜெயா**, இ.ஆ.ப.,
ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை,
சென்னை.

திரு. **க.கார்த்திகேயன்**, இ.கா.ப.,
காவல்துறை துணைத்தலைவர்,
திண்டுக்கல்.

திருமதி. **ந.திருமகள்**,
கூடுதல் ஆணையர்(பொது),
இந்து சமய அறநிலையத்துறை, சென்னை.

திருமதி. **மா.கவிதா**,
கூடுதல் ஆணையர்(திருப்பணி),
இந்து சமய அறநிலையத்துறை, சென்னை.

திரு. **ஆர்.சுதர்சன்**,
கூடுதல் ஆணையர் (விசாரணை) கூ.பொ,
இந்து சமய அறநிலையத்துறை, சென்னை.

திருமதி. **சி.ஹரிப்ரியா**,
இணை ஆணையர் (தலைமையிடம்)
இந்து சமய அறநிலையத்துறை, சென்னை.

முனைவர். **ந.தனபால்**,
இணை ஆணையர் (சரிபார்ப்பு) தலைமையிடம்
இந்து சமய அறநிலையத்துறை, சென்னை.

திரு. **பி.ஆர்.அசோக்**,
இணை ஆணையர் (சட்டம்) தலைமையிடம்
இந்து சமய அறநிலையத்துறை, சென்னை.

மற்றும் அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள். தாங்களும் இத்திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாவில் கலந்து கொண்டு அருள்மிகு அகோபில வரதராஜப்பெருமாள் திருவருளை பெற்றுய்யுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

இங்ஙனம்

**இரா.மேனகா**
உதவி ஆணையர்/நேர்முக உதவியாளர்
துணை ஆணையர் (முழு கூடுதல் பொறுப்பு)

**சீ.செல்வராஜ்**
இணை ஆணையர்/செயல் அலுவலர்/தக்கார்

# நிகழ்ச்சி நிரல்

## ஸ்ரீ ஹேவிளம்பி வருடம்
## கார்த்திகை மாதம் 12-ம் நாள் 28.11.2017 செவ்வாய்கிழமை

**மாலை 5.00 மணிக்கு** - **முகில் வண்ணனுக்கு முதற்கால யாகசாலை பூஜை ஆரம்பம்.**
மங்கள இசை, அனுக்ஞை, ஆச்சார்ய வர்ணம், விஷ்வக்சேனா ஆராதனம், புண்யாஹவாசனம், வாஸ்து பூஜை, ஹோமம், பேரிபூஜை, காப்பு கட்டுதல், மிருத்ஸங்க்ரஹணம், அங்குரார்ப்பணம், வாஸ்து இழுத்தல், கலாகர்ஷணம், யாகசாலை பிரவேசம், நான்மறைகளும் அருளிச்செயல்களுக்கு சேவை தொடக்கம், த்வாரகும்ப, சோமகும்ப ஸ்தானம், பீஜாவாபம், கும்ப மண்டலாராதனங்கள், (திருவாரதனம்) யாகாரம்பம், பூர்ணாகுதி, நிவேதனம், தீபாராதனை, சாற்றுமறைகள், பிரசாதம் வழங்குதல்.

## கார்த்திகை மாதம் 13-ம் நாள் 29.11.2017 புதன்கிழமை

**காலை 9.00 மணிக்கு** - **இன்பங்களை நல்கும் ரிஷிகேசனுக்கு இரண்டாம்கால யாகசாலை பூஜை ஆரம்பம்**
மங்கள இசை, அனுக்ஞை, ஆச்சார்ய வர்ணம், விஷ்வக்சேனா ஆராதனம், புண்யாஹவாசனம், த்வாரகும்ப, மகாகும்ப மண்டலாராதனங்கள், யாகாரம்பம், ஜலாதிவாசம், தான்யாதிவாசம் மிருதாலோபனம், நேத்ரோத்மிலனம் (கண் திறத்தல்), சயனாதிவாசம், விமானகலசங்கள் அபிஷேகம், யாகாரம்பம், சர்வகாயத்ரிகள், பூர்ணாகுதி, தீபாராதனை, சாற்றுமறைகள், பிரசாதம் வழங்குதல்.

**மாலை 4.00 மணிக்கு மேல் 5.00 மணிக்குள்** - **எந்திர ஸ்தாபனம், அஷ்டபந்தன மருந்து சாற்றுதல்.**

tnhrce.org

**மாலை 5.00 மணிக்கு** - **மூவரில் முதல்வனாக இருக்கின்ற வரதராஜனுக்கு மூன்றாம்கால யாகசாலை பூஜை ஆரம்பம்.**
மங்கள இசை, அனுக்ஞை, ஆச்சார்ய வர்ணம், விஷ்வக்சேனா ஆராதனம், புண்யாஹவாசனம், பிம்பசுத்தி பூஜைகள், த்வாரகும்ப, மகா கும்ப மண்டல ஆராதனைகள், யாகாரம்பம், சர்வகாயத்ரிகள், பூர்ணாகுதி, நிவேதனம், தீபாராதனை, சாற்றுமறைகள், பிரசாதம் வழங்குதல்.

## கார்த்திகை மாதம் 14-ம் நாள் 30.11.2017 வியாழக்கிழமை

**காலை 7.30 மணிக்கு** - **நான்மறை ஓதும் நாராயணனுக்கு நான்காம்கால யாகசாலை பூஜை ஆரம்பம்.**
மங்கள இசை, அனுக்ஞை, ஆச்சார்ய வர்ணம், விஷ்வக்சேனா ஆராதனம், புண்யாஹவாசனம், த்வாரகும்ப, சோமகும்ப பூஜைகள், யாகாரம்பம், தத்வஹோமம், பிராணப் பிரதிஷ்டை (நாடி சந்தானம்), பூர்ணாகுதி, தீபாராதனை, யாத்ராதானம், யாகசாலையிலிருந்து திருக்குடங்கள் புறப்படுதல்.

காலை 10.15 மணிக்கு - **அருள்மிகு ஸ்ரீதேவி, பூதேவி சமேத அகோபில வரதராஜ பெருமாள், அருள்மிகு பெருந்தேவித்தாயார், அருள்மிகு ஆண்டாள் விமானங்கள் மற்றும் பரிவார விமானங்களுக்கு சமகால மகாகும்பாபிஷேகம்.**

காலை 10.35 மணிக்கு - **அருள்மிகு ஸ்ரீதேவி, பூதேவி சமேத அகோபில வரதராஜ பெருமாள், அருள்மிகு பெருந்தேவித்தாயார், அருள்மிகு ஆண்டாள் மற்றும் பரிவார மூர்த்திகளுக்கு மூலஸ்தான மகாகும்பாபிஷேகம்.**

காலை 11.00 மணிக்குள் - சாற்றுமுறை, தீர்த்தபிரசாதம் வழங்குதல், பஞ்சதரிசனம்.

இரவு 7.00 மணிக்கு - அருள்மிகு ஸ்ரீதேவி, பூதேவி சமேத அகோபில வரதராஜ பெருமாள் கருட வாகன புறப்பாடு.

ஸர்வசாதகம்

ஸ்ரீ பாஞ்சராத்ர ஆகம வித்வான் திருவெள்ளரை பெரியகோயில்
மிராஸ் அர்ச்சகர் பா.வாசுதேவ பட்டாச்சாரியார் குமாரர். **வா.கோபாலகிருஷ்ண பட்டர்**
அருள்மிகு அகோபில வரதராஜப்பெருமாள் திருக்கோயில் ஸ்தல அர்ச்சகர்கள்

யாகவேள்வி நடைபெறும் போது நாலாயிரதிவ்யபிரபந்தம், வேதங்கள் மற்றும் பாசுரம் சேவித்தல் நடைபெறும்.

அழைப்பிதழ் உபயம் : **ஆறுபடை முருகபக்தர்கள் பேரவை அன்னதானக்குழு,**
ஆறுகோம்பை வீதி, P.N.ரோடு, திருப்பூர்.